# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 78 | thalaivaasaltv@gmail.com | ஞாயிற்றுக்கிழமை | டிசம்பர் 20, 2020


## மருதனார்மடம் கொத்தணி கொரோனா வீரியமானது

### பரவல் அதிகரிக்க அதுவே காரணமாம்



மருதனார்மடம் கொத்தணியில் பரிசோதிக்கப்பட்ட தொற்றாளர்களின் மாதிரிகள் பலவற்றில் காணப்படும் கொரோனா வைரஸ் இன் அளவு கூடுதலாக இருப்பது அவதானிக்கப் பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வடக்கில் கண்டறியப்பட்ட வைரஸின் அளவு கூடுதலாக கணிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையைவிட கூடுதலாக உள்ளது மருதனார்மடம் கொத்தணி வேகமாக பரந்துபட்டு பரவுவதற்கு இது காரணமாக இருக்கலாம் என்று யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மூத்த விரிவுரையாளர் ஏ.முருகானந்தன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிய மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனையானது வைரஸ் தொற்று உண்டு அல்லது இல்லை என்பதற்கு அப்பால் குறிப்பிட்ட நபரின் காணப்படும் வைரஸின் அளவை துல்லியமாக கணிக்க வல்லது என்று அவர் குறிப்பிட்டார்.

மருதனார்மடம் கொத்தணியில் பலருக்கு தொற்று ஏற்படுவதற்கான காரணம் என்ன என ஊடகங்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில் வடக்கில் கடந்த காலங்களில் கண்டறியப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் மாதிரிகளில் காணப்பட்ட

03

## சீரற்ற காலநிலையால் யாழில் 198 பேர் பாதிப்பு



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, 58 குடும்பங்களைச் சேர்ந்த 198 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று, யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார்.

03

## வலி.வடக்கு பிரதேச சபை ஊழியருக்கு கொரோனா

### சேவைகள் வழமை போல் நடக்கும் என்கிறார் தவிசாளர்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் செயற்பாடுகள் வழமைபோல் இடம்பெறும் என வலிவடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், “தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகு உட்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஊழியர் ஒருவருக்கு நேற்றைய தினம் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த ஊழியர் மின்மோட்டார் இயக்கும் கடமையினை புரிபவரே தவிர பிரதேச சபை

03

## யாழில் மேலும் இருவருக்கு கொரோனா மருதனார்மடம் கொத்தணி 90 ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் நேரடியாக தொடர்புடைய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த 120 பேருக்கு இன்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பரிசோதனை செய்யப்பட்டது.

இந்த பரிசோதனை முடிவுகளிலேயே தெல்லிப்பழை சுகாதார வைத்திய பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். இதனையடுத்து மருதனார்மடம் கொரோனா கொத்தணியில் தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது.

## தேவாலயங்கள் மீது தாக்குதல்: வட்சப்பில் மிரட்டியவர் கைது



சில தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக வட்சப் ஊடாக போலி தகவல் பரிமாறிய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளாரென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

03

## பிரதேச சபை தவிசாளர் சுகிர்தனின் வாகனம் மீது தாக்குதல்



வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளரின் வாகனத்தின் மீது தலைக்கவசத்தாலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன் பயணித்த வாகனம் மீது அடையாளம் தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இன்று இரவு வேளை குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் வாகனத்தின் கண்ணாடி சேதம் அடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

03

# அமைச்சரவை செயலகத்தில் நால்வருக்கு கொரோனா

### குழப்பத்தில் கோத்தா அரசு

அமைச்சரவை செயலகத்தில் பணிபுரியும் நான்கு பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ள தாகவும் இதனால் அமைச்சர்களது நிலை குறித்த அச்சம் ஏற்பட்டுள்ளதால் தினாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் பெரும் குழப்பத்தில் இருப்பதாக தெரியவருகிறது.

இதையடுத்துப் பெரும் குழப்பமடைந்துள்ள ஜனாதிபதி கோட்டைபாய ராஜபக்ச, அமைச்சர்களைக் காப்பாற்றும்

03




## கொரோனா தொற்றிலிருந்து 715 பேர் பூரண குணம்

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் இன்று (20) மேலும் 715 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 28,267 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 171 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று மாவட்டங்களில் அதிக தொற்றாளர்கள்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டோரில் அனேகமானோர் கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளனர் என, கொவிட் 19 ஒழிப்புக்காக தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நேற்று அடையாளம் காணப்பட்ட 618 தொற்றாளர்களில் 241 பேர் கொழும்பிலும் 120 பேர் களுத்துறையிலும் 99 பேர் கம்பஹாவிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் நாட்டின் ஏனைய மாவட்டங்களில் பதிவாகியுள்ளனர் என, கொவிட் 19 ஒழிப்புக்காக தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் பொரலை, கொம்பனித்தெரு, புளுமென்டல் ஆகிய பிரதேசங்களில் அதிக தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## தலைவாசல் தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

### இனப்பெருக்க மற்றும் பாலியல் சுகாதார கல்வி

கட்டிளமைப்பருவத்தினர் தம் கட்டிளமைப்பருவத்தினை ஆரோக்கியமாக கடந்து வளமான வாழ்க்கை வாழ இனப்பெருக்க மற்றும் பாலியல் கல்வி அவசியமானது. கட்டிளமைப் பருவத்தினரின் பெற்றோர் அவசியம் தம் குழந்தைகளிடம் இனப்பெருக்க மற்றும் பாலியல் தொடர்பான விடயங்களை கதைக்க வேண்டும். மேலதிக வழிகாட்டலுக்காக உங்கள் பிரதேச பொது சுகாதார பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர்களுடன் உங்கள் பிள்ளைகளை கலந்துரையாட வாய்ப்புக்களை வழங்குங்கள்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**


## பொலன்னறுவையில் இரண்டு மாணவர்களுக்கு கொரோனா தொற்று

பொலன்னறுவை ரோயல் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் இருவருக்கு கொவிட் 19 தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்படி மாணவர்கள் கல்வி பயின்ற இரண்டு வகுப்பறைகள் மூடப்பட்டுள்ளதாக, பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்விரு மாணவர்களின் தந்தைக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து இவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனை மூலம் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## பிரதேச சபை உறுப்பினருக்கு கொரோனா



வென்னப்புவ பிரதேசசபை உறுப்பினர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக, தங்கொட்டுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி நபர் 14 நாட்கள் வீட்டில் தனிமைப்படுத்தலில் ஈடுபட்டிருந்த நிலையில் கடந்த 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளுக்கமைய அவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிகிச்சைக்காக அவர் அழைத்து செல்லப்பட்டுள்ளதுடன் அவரது வீட்டாரை தொடர்ந்தும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வான்பாயும் குளங்களைப் பார்க்கச் செல்லவேண்டாம்

### ஆபத்தை எச்சரிக்கிறார் முல்லை. மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் குளங்கள் அனைத்திலும் தற்போது நீர் நிரம்பி உள்ளமையால், சிறுவர்கள், பெரியவர்கள், குளங்களின் சூழலுக்குச் செல்ல வேண்டாமென, முல்லைத்தீவு மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில், முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு அவர் அறிவுறுத்துகையில், "மழைக் காலத்தில் குளங்கள் நிரம்புகின்றபோது, குளச் சூழல் ஆபத்து மிகுந்ததாகவே இருக்கும். குளச் சூழலுக்குத் தேவையற்ற விதத்தில் செல்வதைத் தவிர்ப்பதன் மூலம், ஆபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

"முல்லைத்தீவு மாவட்டக் குளங்களின் அணைக்கட்டு வீதி வழியாகப் போக்குவரத்துகள் நடைபெறுவது வழமை. இது, மழைக் காலங்களில் ஆபத்தானது. கடந்த காலங்களில் அணைக்கட்டு வீதி வழியான போக்குவரத்துகளுக்கு மாற்று வழிகள் தொடர்பாக சிந்தித்த போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

"எதிர்காலத்தில் அணைக்கட்டு மேலான போக்குவரத்துகளைத் தவிர்ப்பதன் மூலம், வவுனிக்குளத்தில் நேற்று (19) நடைபெற்ற விபத்துகள் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ளலாம்" என்றார்.

## மார்ச் மாதத்தில் மட்டும் சில தமிழ் அரசியல்வாதிகளுக்கு கிளுகிளுப்பு வந்துவிடுகிறது



கடந்த ஐந்து வருடங்களாக நல்லாட்சி அரசாங்கத்திற்கு சகல விதங்களிலும் முட்டுக்கொடுத்து ஆட்சி கவிழும் நிலையில் அவர்களை இக்கட்டான சந்தர்ப்பங்கள் பலவற்றில் காப்பாற்றி ஆட்சி தொடர உதவி புரிந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அந்த பொற்காலத்தை தவறவிட்டுவிட்டு இன்று இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று நீலிக்கண்ணீர் வடிப்பது வேடிக்கைக்கும் கவலைக்குமுரிய விடயமாகும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவுக்கு வந்த காலம் முதல் மஹிந்த ராஜபக்ச குடும்பத்தினரையும் அவர்களது அரசாங்கத்தையும் குற்றஞ்சாட்டுவது மட்டுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களது செயற்பாடாக இருந்துவருகிறது. இவர்கள் தமிழ் மக்களை பற்றி ஒருபோதும் சிந்திக்கவில்லை, அப்படி சிந்தித்திருந்தால் தமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாக நல்லாட்சி அரசாங்கத்தில் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினை கண்டிருக்கலாம். அரசியல் தமிழ் கைதிகளை விடுவித்து இருக்கலாம், காணாமல் போனோர் பற்றிய விடையத்தை முடிவுக்கு கொண்டு வந்திருக்கலாம். ஜெனிவாவில் ஒரு தீர்வினை கண்டிருக்கலாம். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. பொதுவாகவே மார்ச் மாதம் வந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கும் சில தமிழ் கட்சிகளுக்கும் ஒரு கிளுகிளுப்பு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால் இவர்கள் அவ்வப்போது அந்த அரசாங்கத்தின் அற்ப சொற்ப சலுகைகளை பெற்று தமிழ் மக்களை மறந்து விட்டார்கள். இன்று மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போல் ஜெனிவா பிரச்சினை, ஒற்றுமை, போர்க்குற்றம் பற்றி பாராளுமன்றத்தில் வாய்கிழிய பேசுகிறார்கள். இவர்கள் தாம் ஆற்றும் உரைகளை பார்த்து அவர்களே சிரித்துக் கொள்ளும் அளவிற்கு நடந்துகொள்கிறார்கள்.

முதலில் அவர்கள் தங்களுக்குள் ஒரு ஒற்றுமைக்கு வந்து தமிழர் பிரச்சினைக்கு இதயசுத்தியுடன் தீர்வு காண முன் வருவார்களேயானால் இன்றைய அரசாங்கத்தில் இந்த இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு விடலாம் எனவும் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

## தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் திருக்கோவில் தொழிற் பயிற்சி நிலையத்தில் 2021ஆம் வருட 01ஆம் தொகுதிக்கான பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, நிலையப் பொறுப்பதிகாரி ஈ. திலகராஜ் தெரிவித்தார்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், குளிரூட்டி, வாய்வு சீராக்கி திருத்துநர், தையல் (சிறுவர் மற்றும் மகளிர்), மர கைவினைஞர் (தளபாடம்) ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கும் இளைஞர், யுவதிகள் இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பதிகாரி, தொழிற்பயிற்சி நிலையம், பாடசாலை வீதி, விநாயகபுரம், திருக்கோவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை 0711213378 எனும் அலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியுமென, அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் சிக்கித்தவிக்கும் 12 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள்

இந்த ஆண்டு மார்ச் 15ஆம் திகதிக்குப் பின்னர் எந்தவொரு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகைத் தரவில்லை எனத் தெரிவித்த பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர், பஷில் ராஜபக்ஸ, ஆனால் இலங்கைக்கு வருகைத்தந்த 12,000 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இலங்கையில் சிக்கியுள்ளனரென, தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்கான ஒழுங்குப்படுத்தல் வேலைத்திட்டம் இந்த மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் இந்நடவடிக்கை உத்தியோகபூர்வமாக நடைபெறாவிட்டாலும் உரிய பரிசோதனைகளின் பின்னர், அடுத்த வருடம் ஜனவரி 2ஆம் திகதியிலிருந்து உரிய சுகாதார பரிந்துரைகளின் கீழ், வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு அழைக்கப்படுவர் என்றார்.

# யாழ். மாநகரில் கழிவு வாய்க்கால் சுத்திகரிப்பு





யாழ்ப்பாணம் மாநகரில் கழிவுநீர் வாய்க்கால்கள் சுகாதாரத் தொழிலாளிகளால் கழிவுப்பொருள்கள் அகற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகரின் போதனா வைத்தியசாலை வீதியில் இந்த நடவடிக்கை இன்று (டிசெ.20) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் முன்னெடுக்கப்பட்டது.

கழிவுநீர் வாய்க்காலுக்குள் பிளாஸ்டிக் கழிவுகள் தேங்கிக் கிடப்பதனால் நீர் வழிந்தோடு செயற்பாடு பாதிக்கப்பட்டது. அதனால் வெள்ள நீர் வழிந்தோடுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளிகளினால் கழிவுநீர் வாய்க்கால்கள் துப்புரவு செய்யும் பணி இன்று முன்னெடுக்கப்பட்டது.

படங்கள் - ஐ.சிவசாந்தன்

# விமான நிலையங்களை மீள திறப்பது தொடர்பான ஒத்திகை



விமான நிலையங்களை மீளத் திறப்பது தொடர்பான ஒத்திகை எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவிருப்பதாக வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையங்களை எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் திறப்பது தொடர்பில் திட்டவட்டமான முடிவு எட்டப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். இருப்பினும் இது தொடர்பில் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடுகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

2020 செப்டம்பர் 01ஆம் திகதி முதல் 2020 டிசம்பர் 16ஆம் திகதி வரை தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை நிறைவு செய்த பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தீர்வை வரியற்ற வர்த்தக நிலைய தொகுதிகளில் பொருட்களை கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம்
# இதுவரையில் 55 கர்ப்பிணி தாய்மாருக்கு கொரோனா

களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் இதுவரையில் 55 கர்ப்பிணி தாய்மாருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், அபாயமற்ற பகுதிகள் என்று கருதப்படும் இடங்களில்கூட எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கும்போது கனிசமானளவு தொற்றாளர்கள் இனங்காணப்படுகிறார்கள் என தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் அபாய நிலைமை தீவிரமாக அதிகரித்துச் செல்கிறது எனவும் அவர் தெரிவித்தார். களுத்துறை மாவட்டத்தில் இதுவரையில் 55 கர்ப்பிணி தாய் மாருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது. அந்த 55 பேரில் 45 பேர் அட்டலுகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். பண்டாரகம பிரதேசத்தில் மாத்திரம் இது வரையில் 741 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். இவர்களில் 601 தொற்றாளர்கள் அட்டலுகமவிலுள்ளவர்கள் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும் எனவும் அவர் தெரிவித்தார். இங்கு மாத்திரமின்றி காலி, பொலன்னறுவை, மத்திய மலைநாட்டில் பெருந்தோட்டப் பிரதேசங்கள் என்பவற்றிலும் தற்போது அபாய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். பொலன்னறுவை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்குக்கூட தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே இவற்றை முறையாக முகாமைத்துவம் செய்யாவிட்டால் பாரிய பாதிப்புக்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பிரதேச சபை...

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று வலி.வடக்கு பிரதேசத்தில் ஒரு வீதிக்கு இரண்டு தரப்புக்கள் பெயர்ப்பலகை நாட்டியதாக தகவல் வெளியாகியிருந்த நிலையில் குறித்த சம்பவத்தின் தொடரான நடவடிக்கையாக இது இருக்கக்கூடும் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

## அமைச்சரவை...

நடவடிக்கையில் களமிறங்கியுள்ளார் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று இன்று பரபரப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாகவே அண்மைய அமைச்சரவை சந்திப்புக்கள்கூட இணையவழி ஊடாக நடத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் இணையம் மூலமாக அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தும் அரசின் செயற்பாட்டுக்கு அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

இது தொடர்பில் முக்கிய அமைச்சர் ஒருவரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, "வீட்டுக்குள்ளேயே கொரோனா வந்துவிட்டது. அந்தவகையில் அமைச்சரவைக்குள் கொரோனா புகுந்தது ஆச்சரியம் அல்ல. அமைச்சர்களைக் காப்பாற்றவே இணைய வழி ஊடான சந்திப்புக்களை ஜனாதிபதி நடத்தி வருகின்றார்" என்று பதிலளித்தார்.

## மருதனார்மடம்...

வைரஸின் அளவு அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தொற்றாளர்களில் இருந்து பிறிதொரு நபருக்கு மிக இலகுவாகவும் துரிதமாகவும் வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது இதனால் அது வேகமாக பரவுகின்றது.

கொரோனா வைரஸ் அளவு குறைந்த ஒருவரிடமிருந்து வெளியேறும் வைரஸ் கூறுகளின் அளவு குறைவாக இருப்பதனால் அவரிடமிருந்து பிறிதொரு நபருக்கு வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவாக காணப்படும்.

ஆனால் வைரஸ் அளவு கூடிய ஒருவருடன் சில நிமிடங்கள் முகக்கவசம் இன்றி உரையாடினாலேயே அந்த தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக மிக அதிகம்.

பி சி ஆர் பரிசோதனை அறிக்கையில் மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடையதாக தொற்று உறுதிப்படுத்தப்படுபவர்களில் வைரஸ் அளவு கூடியவர்கள் தொடர்பில் அடையாளப்படுத்திய நாம் வழங்கு கின்றோம்.

ஏனெனில் அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு தொற்று பரவிவி இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றார். யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பி.சி. ஆர் சோதனைகளை முன்னெடுப்பதில் முக்கிய பங்காற்றியவர் மூத்த விரிவுரையாளர் ஏ.முருகானந்தன் என்பது குறிப்பிடத்தக்கது.

## வலி. வடக்கு...

ஊழியர்களோடு நேரடித் தொடர்புகொண்டிருக்கவில்லை. குறித்த ஊழியர் வலி வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பளை உபஅலுவலகத்தில் கடமை புரிகின்றார். குறித்த ஊழியருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதன் காரணமாக வடக்கு பிரதேச சபையின் செயற்பாடுகளில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. குறித்த நபருடன் நேரடியாக தொடர்பு கொண்டவர்களை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தனிமைப்படுத்தும் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளனர். வலிவடக்கு பிரதேச சபையின் செயற்பாடுகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. வழமைபோல் சேவைகள் இடம்பெறும்" எனத் தெரிவித்துள்ளார்.

## தேவாலயங்கள்...

கந்தானை பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் நேற்று (19) குறித்த நபர், கந்தானை பிரதேசத்திலுள்ள பலருக்கு ஆங்கிலத்தில் அத்தகவலை பகிர்ந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனமொன்றில் கணக்காய்வாளராக கடமையாற்றும் 31 வயதுடைய வெலிகம்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நாளை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## சீரற்ற...

யாழ்ப்பாண மாவட்டத்தில், கடந்த இரு நாள்களாகக் கடும் காற்று மற்றும் பலத்த மழையின் தாக்கத்தின் காரணமாக, யாழ்ப்பாண மாவட்டத்தில், 58 குடும்பங்களைச் சேர்ந்த 198 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள், அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் சேகரிக்கப்பட்டு, உரிய திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.



# மத்திய அதிவேக நெடுஞ்சாலை தம்புள்ளை வரை நீடிக்கப்படும்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

மத்திய அதிவேக நெடுஞ்சாலை நிச்சயமாக தம்புள்ளை வரை நீட்டிக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (19) தெரிவித்தார்.

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய நாடு முழுவதும் பத்து இலட்சம் ரண்பிம காணி உறுதிபத்திரங்களை வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் வடமேல் மாகாணத்திற்கான காணி உறுதிபத்திரங்கள் வழங்கும் நிகழ்வு குருநாகல் ரண்சர மண்டபத்தில் இடம்பெற்ற போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இன்று குருநாகலுக்கு விஜயம் செய்து கண்டிக்கு செல்லும் அதிவேக நெடுஞ்சாலையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். அந்த அதிவேக நெடுஞ்சாலையை தம்புள்ளை வரை நீட்டிப்பதற்கு அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன அவர்கள் கோரிக்கை விடுத்தார். அப்போது அது கிடைக்கும் என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்தார். அதனை நாம் நிச்சயமாக பெற்றுத் தருவோம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த வேண்டும். எம்மால் செய்யக்கூடிய அனைத்து வேலைத்திட்டங்களையும் ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் நாட் முன்னெடுப்போம். ஜனாதிபதி அனைத்து பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்ந்து கிராமங்கள் தோறும் சென்று கிராமங்களிலுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். அதனால் நமக்கும், மக்கள் அனைவருக்கும் இலகுவாக அமையும் எனக் குறிப்பிட்டார்.

### கடற்றொழிலாளர் பிரச்சினை தீராவிட்டால்

# அமைச்சுப் பதவியை தூக்கி வீசுவேன்

## அமைச்சர் டக்ளஸ் சபதம்



கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியாத நிலையேற்படின் கடற்றொழில் அமைச்சுப் பதவியை தூக்கி எறியவும் தயங்க மாட்டேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய எல்லை தாண்டிய சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்ற நிலையில் இன்று (20.12.2020) அங்கு சென்ற கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் உணர்வு ரீதியான விடயமாக தனக்கு அமைந்திருப்பதாக தெரிவித்ததுடன் இவ்விடயத்தில் இந்தியத் தரப்பினரே தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை கடந்த காலங்களில் இலங்கையில் யுத்தம் நடைபெற்ற போது தமிழக மக்களினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கள் மறக்க முடியாதவையாக நன்றிக்குரியவையாக இருக்கின்ற போதிலும் எமது மக்களின் வாழ்வாதாரமும் எமது கடல் வளமும் அழிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே அண்மையில் கைது செய்யப்பட்ட இந்திய கடற்றொழிலாளர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்திருப்பதாவும் குறிப்பிட்டார்.

# புகையிரதங்கள் பேருந்துகளில் சிவில் உடையில் பொலிஸார்

பயணிகள் போக்குவரத்து பஸ்கள் மற்றும் புகையிரதங்களில் இன்று முதல் பொலிஸார், சிவில் உடைகளில் கடமையில் ஈடுபடவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்களை குறைக்கவும், கொவிட் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பொது மக்கள் உரிய முறையில் பின்பற்றுகின்றார்களா என்பதை கண்டறிவதற்காக சிவில் உடைகளில் பொலிஸார் கடமையில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவில் கெப் ரக வாகனம் குளத்துள் பாய்ந்ததில் மூவர் சாவு



முல்லைத்தீவு வவுனிக்குளத்தில் பாய்ந்து கெப் ரக வாகனமொன்று விபத்துக்குள்ளான சம்பவத்தில் இரண்டு குழந்தைகளும் மற்றும் நபரொருவரும் உயிரிழந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் குளக்கட்டில் பயணம் செய்து கொண்டிருந்த கெப் ரக வாகனம் ஒன்று நேற்று (19) மாலை குளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

குறித்த வாகனத்தில் குடும்பத் தலைவர் ஒருவரும் அவருடைய பிள்ளைகள் மூவரும் பயணம் செய்துள்ள நிலையில் வாகனம் விபத்துக்குள்ளான நிலையில் குறித்த வாகனத்தில் பயணம் செய்த சிறுவன் ஒருவன் வாகனத்தில் இருந்து வெளியே வந்து குளத்தில் நீந்தி கரை சேர்ந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிசார், கடற்படையினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து வாகனத்தை குளத்தில் இருந்து மீட்டு எடுத்த போது வாகனத்தில் இருந்து சிறுவன் ஒருவன் சுயநினைவற்ற நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, வாகனத்தின் உடைய சாரதியான 37 அகவையுடைய கிருஸ்ணபிள்ளை ரசீந்திரன், அவரது மூன்று வயது மகளாக ரசீந்திரன் சார்ஜனா ஆகியோரை தேடும் நடவடிக்கையில் பொலீசார், படையினர், பொதுமக்கள் ஈடுபட்டு வந்த நிலையில் அவர்கள் இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

விபத்தின் போது நீரில் மூழ்கிய ரவீந்திரகுமார் சஞ்சீவன் என்ற 13 அகவையுடைய சிறுவன் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிறுவன் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குளத்தினை பார்வையிட சென்ற சந்தர்ப்பத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின் தெரியவந்துள்ளது.

# நத்தார் ஆராதனை 25 பேருக்கு அனுமதி

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் அவசர கூட்டம் நேற்று மாவட்ட வெயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பண்டிகைக் காலங்களில் மக்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

நத்தார் பண்டிகை அதனை தொடர்ந்து புத்தாண்டு அதன்பின் பொங்கல் பண்டிகை என தொடர்ச்சியாக பண்டிகை காலமாகையினால் மக்கள் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்து மிக அவதானத்துடன் செயல்படும்படி அரசாங்க அதிபர் வேண்டுகொள் விடுத்துள்ளார்.

தேவாலயங்களுக்கு நத்தார் பண்டிகை விசேட ஆராதனைகளில் 25பேர் மாத்திரம் கலந்து கொள்ள முடியும், அங்கு வருகின்றவர்கள் கண்டிப்பாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றல் வேண்டும் அவ்வாறு சுகாதார நடைமுறைகளை அலட்சியம் செய்பவர்களை அவதானிப்பதற்கு பொலிஸ் விசேட குழுவினருடன் பொது சுகாதார பரிசோதகர்கள் இணைக்கப்பட்டுள்ளனர் என தீர்மானிக்கப்பட்டது.

# ஹெரோயினுடன் மூவர் கைது

300 கிராம் ஹெரோயின் மற்றும் ரூ. 59 மில்லியன் பணத்துடன் பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது,

வெலிவிட, மாலபே மற்றும் கடுவெலை ஆகிய பிரதேசங்களில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.